DVC.No. 02/2024 கரோலின் மார்க்ரேட் க/பெ. PW1

**<u>குறுக்கு விசாரணை தொடர்சி (எதிரி தரப்பில்)</u>**

நான் தற்சமயம் எனது அப்பா வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த வீட்டின் முகவரி என்னவென்றால் 2/131 தெற்கு தெரு இடங்கிமங்கலம், வெள்ளனூர் ஆகும். எனது அப்பாவின் மற்ற சொத்துக்களை யார் யாருக்கு ஒத்திக்கு கொடுத்துள்ளேன் என்றால் நான் சொத்துக்களை ஒத்திக்கு கொடுக்கவில்லை ஒரு வயல் மட்டும் ஒத்திக்கு கொடுத்துள்ளேன். மற்ற சொத்துக்களை விற்றுவிட்டேன். வயலை எவ்வளவு தொகைக்கு ஒத்திக்கு வைத்துள்ளேன் என்றால் ரூ. 3,40,000/–க்கு ஒத்திக்கு வைத்துள்ளேன். 2020 ம் ஆண்டு எனக்கு சொந்தமான புள்ளம்பாடியில் உள்ள நிலத்தை வேறு ஒரு நபருக்கு கிரையம் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் 2020 ம் ஆண்டு கிரையம் எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **எ.ம.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மகள் ஆன்சிக்கு முதல் குழந்தை திருச்சியில் உள்ள ஜெண்ணட் மருத்துவமனையில் பிறந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் Joseph Jumkilee எனது மகளுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ளது Jumkilee யும் எனது மகளின் குழந்தையும் என்றால் சரிதான். அந்த புகைப்படங்கள் (மூன்று எண்ணிக்கை) **எ.ம.சா.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி நிறைவு பெற்று விட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது கணவர் ஓய்வு பெறுவதற்கு முன்னால் அவர் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளிடம் புகார்

கொடுத்தேன் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் அவருடைய வேலை பதிவேட்டில் என்னுடைய பெயரை நீக்கிவிட்டு உத்தமி என்பவருடைய பெயரை சேர்த்ததால் நான் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த பிறகு திருவெறும்பூர் துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். 2001 ம் ஆண்டுக்கு பிறகு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ சட்டப்படியான நடவடிக்கைகள் எடுத்தேனா என்றால் எடுத்தேன். நான் என்ன சட்ட நடவடிக்கைகள் எடுத்தேன் என்றால் உயர் அதிகாரிகளிடம் புகார் கொடுத்தேன். அவ்வாறு நடவடிக்கைகள் எடுத்ததற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய மகளின் திருமணத்தின் போது எனது கணவர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. எனது மகளின் திருமண அழைப்பிதழில் எனது கணவரின் பெயரை அச்சிட்டேனா என்றால் அச்சிட்டேன். அந்த திருமண அழைப்பிதழில் உத்தமி கரோலின் பெயரும் அவரது இரு மகன்களின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் திருமண அழைப்பிதழ்தான் எனது மகளின் திருமணத்திற்கு அச்சிடப்பட்டது. அந்த திருமண அழைப்பிதழ் **எ.ம.சா.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவருக்கு எதிரான துறை ரீதியான நடவடிக்கையில் என்னிடம் ஆன்சி திருமணத்திற்கு தேவையான செலவுக்கு நான் சிலரிடம் கைமாற்றாக பெற்ற பணம் என் மனைவி உத்தமி சாரால் கேத்தரின் அவர் பிறந்த வீட்டில் இருந்து அணிந்து வந்த நகைகளின் சிலவற்றை விற்று கிடைத்த பணம் சேர்ந்து சுமார் ரூ. 1,25,000/- மற்றும் உத்தமி சாரால் கேத்தரினின் நகை இருபது பவுன் ஆகியவற்றை அவர் தன் மகன்களுடனும் எனது மாமா மகன் ராஜ்குமார் ஆகியோருடன் உங்கள் வீட்டிற்கு வந்து உங்கள் தாயார் மற்றும்

உறவினர்களின் முன்பாக ஒப்படைத்தேன் என்பது சரிதானே என்ற கேள்விக்கு இருபது பவுன் நகை மற்றும் சீர் வரிசை கொடுத்தார் என்றால் சரிதானே என்ற கேள்விக்கு இருபது பவுன் நகை மற்றும் சீர் வரிசை கொடுத்தார்கள் பணம் ரூ.1,25,000/– கொடுக்கவில்லை என பதில் அளித்தேன் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் நான் எந்த நகையும் வாங்கவில்லை என்று சொன்னார். எனது மருமகன் இராணுவத்தில் தான் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எனது மகளின் மாமனார் பெயர் பிச்சை லூர்துசாமி மாமியார் பெயர் லில்லி என்றால் சரிதான். எனது கணவர் தான் எனது மகளின் திருமணத்தை முன் நின்று நடத்தினார் என்றாலும் எனது மகளின் மாமனார் மாமியாரை விசாரணை செய்தால் அது தெரிய வரும் என்றால் சரியல்ல. எனது மகளின் மாமனார் மாமியாரை சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. எனது கணவர் மீது உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவரின் ஓய்வு பலன்களில் இருந்து எனக்கு பங்கு வேண்டும் என பஞ்சாயத்து எதுவும் செய்தேனா என்றால் இல்லை. நான் வட்டி தொழில் செய்கிறேன் என்றால் இல்லை. எனது கணவரின் ஓய்வு பலன்களை பெற வேண்டும் என்பதற்காகதான் 2001 ம் ஆண்டுக்கு பிறகு தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இப்போது வரை நான் எனது மகள் உத்தமி சாரால் கேத்தரின் மற்றும் அவரது இரு மகன்கள் பரிட்சையமாக இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் கீழே உள்ள புகைப்படத்தில் நடுவில் உள்ளது எனது அம்மா என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் இடது பக்க கடைசியில் இருப்பவர் உத்தமி சாரால் கேத்தரின் சாரால் என்றால் சரிதான்.

அந்த புகைப்படம் **எ.ம.சா.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் என்னுடைய மனுவில் பல உண்மைகளை மறைத்து பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை குடும்ப வண்முறைக்கு எதிர் மனுதாரர் உள்ளாக்காத காரணத்தால் நான் மனுவில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.01.28 15:17:31 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி